මුදල් අමාත්‍යාංශය
நிதி அமைச்சு
MINISTRY OF FINANCE

මහලේකම් කාර්යාලය, කොළඹ 01, ශ්‍රී ලංකාව.
செயலகம், கொழும்பு 01. இலங்கை
The Secretariat, Colombo 01. Sri Lanka

කාර්යාලය / அலுவலகம் / Office: (94)-11-2484500, (94)-11-2484600, (94)-11-2484700
ෆැක්ස් / பெக்ஸ் / Fax: (94)-11-2449823
වෙබ් අඩවිය / வெப் சைட் / Website: www.treasury.gov.lk

මගේ අංකය / எனது இல. / My No.: பீடி/சிபிபீ/4/1/15-2016
ඔබේ අංකය / உமது இல. / Your No.:
දිනය / திகதி / Date: 2015.12.29

**தேசிய வரவு செலவுத்திட்ட சுற்றுநிருபம் இல.07/2015**

அமைச்சின் செயலாளர்கள்
மாகாண சபை பிரதான செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்
கூட்டுத்தாபன, நியதிச்சட்ட சபைகளின் தலைவர்கள் அனைவருக்கும்

## 2016 ஆண்டு செலவினத்திற்கான அதிகாரமளித்தல் மற்றும் அரசாங்க செலவின முகாமைத்தும்

### 01. செலவினம் மேற்கொள்வதற்கான அதிகாரப்பத்திரம்

அரசியலமைப்பின் 150(1) உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கு அமைவாக 2015.12.19 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட 2015 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்திற்கு அமைவாக 2016 ஆம் ஆண்டிற்கான செலவினம் தொடர்பில் உரிய ஆணைப்பத்திரம் கௌரவ நிதி அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில், கொடுப்பனவு வவுச்சர்கள் மற்றும் ஏனைய ஆவணங்களின் அடிப்படையில் அதிகாரப்பத்திரத்தில் பின்வருமாறு குறிப்பிடப்படுதல் வேண்டும்.

(அ) சாதாரண பொதுச்சேவை தொடர்பில் 2015 இன் 4 ஆம் இலக்க அதிகாரப் பத்திரம்.
(ஆ) விசேட சட்டச்சேவை நடவடிக்கை தொடர்பில் 2015 இன் 6 ஆம் இலக்க விசேட சட்ட அதிகாரப் பத்திரம்.
(இ) முற்பணக் கணக்கு நடவடிக்கை தொடர்பில் 2015 இன் 4 ஆம் இலக்க முற்பண அதிகாரப் பத்திரம்.

### 02. அரசாங்க செலவின முகாமைத்துவம்

2016 வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டில் குறிப்பிட்டவாறு மீண்டெழும் மற்றும் மூலதன ஏற்பாட்டு வரையறைகளுக்குள் உரிய செலவினத்தினை முகாமை செய்வதற்குப் பிரதான கணக்கீட்டு அலுவலர்கள் மற்றும் கணக்கீட்டு அலுவலர்கள் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

வரவு செலவுத்திட்ட ஏற்பாடுகளின் வினைத்திறன் மிக்க மற்றும் சிறந்த பயன்பாட்டுக்கான தேவையினைக் கருத்திற் கொண்டும் வரவு செலவுத் திட்ட விவாதத்தில் நிதி அமைச்சரினால் உத்தேசிக்கப்பட்டவாறும் செலவினத் தலைப்பு 1202 – எரிபொருள் 15 சத வீதத்தினாலும் செலவினத் தலைப்பு 1401 – போக்குவரத்து 10 சதவீதத்தினாலும் கட்டாய சேமிப்பு 2016 வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் இருந்து மேற்கொள்ளப்பட வேண்டும். இதற்கமைவாக பிரதான கணக்கீட்டு அலுவலர்கள் மற்றும் கணக்கீட்டு அலுவலர்கள் குறித்த செலவின தலைப்புகளில் இருந்து வரவு செலவுத்திட்ட ஒதுக்கீடுகளுக்கான சேமிப்புகளை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

## 03. 2016 வரவு செலவுத் திட்டத்தினை செயற்படுத்தல்

ஒவ்வொரு வரவு செலவுத்திட்ட முன்மொழிவினதும் செயற்படுத்தல் மற்றும் கண்காணிப்பு முகவர்/முகவர்களை பொதுத் திறைசேரி பின்னர் அறிவிக்கும். தொடர்புடைய நிறுவனங்களுக்கிடையில் முறையான ஒருங்கிணைப்பினைப் பேணுவதன் மூலம் குறிப்பேடு செய்யப்பட்ட கால வரையறைக்குள் வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகளை நிறைவு செய்வதற்கு முடியுமான வகையில் வரவு செலவுத் திட்ட முன்மொழிவினை செயற்படுத்துவதற்கான முன்னோடி நடவடிக்கைகளை எடுக்குமாறு நீங்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

2016 வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகள் அனைத்துக்குமான வரவு செலவுத்திட்ட ஒதுக்கீடுகள் கருத்திட்டம் - 240–2–2: “குறைநிரப்பு ஒத்துழைப்பு சேவைகள் மற்றும் நானாவித பொறுப்புக்கள்” என்பதன் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. இதற்கமைவாக நிதி ஏற்பாடுகள் மற்றும் வரவு செலவுத்திட்ட ஒதுக்கீடுகளை விடுவிப்பதற்காக தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களத்திற்கு அனைத்து விபரங்களும் அடங்கிய செயற்பாட்டுத் திட்டமொன்றினை திணைக்களங்கள், அமைச்சுக்கள் மற்றும் நிறுவனங்கள் தயாரித்தல் வேண்டும். 2016 வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகளை செயற்படுத்தல் தொடர்பாக தனியான சுற்றுநிருப அறிவுறுத்தல்கள் விநியோகிக்கப்படும்.

## 04. அர்ப்பணிப்புக் கட்டுப்பாடு (Commitment Control)

(அ) ஒவ்வொரு அமைச்சினதும் திணைக்களத்தினதும் அல்லது நிறுவகத்திற்கான 2016 செயற்பாட்டுத் திட்டமானது 2016 – 2018 நடுத்தர கால செலவின வேலைச் சட்டகத்தின் கீழ் வரவு செலவுத்திட்ட ஒதுக்கீடுகளை வழங்கும் வகையில் தயாரிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(ஆ) பூச்சிய அடிப்படை வரவு செலவுத்திட்ட தயாரிப்பு நடைமுறையின் கீழ், திறைசேரியினால் ஒவ்வொரு அமைச்சும் கடுமையாகக் கண்காணிக்கப்படுவதுடன் கட்டுநிதியானது அவற்றின் செயலாற்றுகையினை அடிப்படையாகக் கொண்டே விடுவிக்கப்படும். இதற்கு மேலதிகமாக அனைத்து பிரதான கணக்கீட்டு அலுவலர்களும் அர்ப்பணிப்புகளை மேற்கொள்கின்றபோது உரிய செலவினத் தலைப்பின் கீழ் போதியளவு வரவு செலவுத்திட்ட ஏற்பாடுகள் காணப்படுகின்றனவா என்பதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

(இ) நிதிப் பிரமானக் குறிப்பு 66 இன் கீழ் நிதி ஏற்பாடுகளின் மாற்றல் அத்தியவசிய தேவைகளுக்கு மாத்திரம் வரையறுக்கப்பட்டிருத்தல் வேண்டும் என்பதுடன் ஒவ்வொரு வேண்டுகோளின் போதும் அதற்கான நியாயப்படுத்தல் முறையாகக் குறிப்பிடப்படாதிருப்பின் அத்தகைய மாற்றல்கள் அனுமதிக்கப்படமாட்டாது.

**05. முற்பணக் கணக்கு நடவடிக்கை**

முற்பணக் கணக்குச் செயற்பாடுகள் பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட வரையறைக்குள் முகாமை செய்யப்படுதல் வேண்டும் என்பதுடன் இது தொடர்பாக காலத்துக்குக் காலம் மீளாய்வு செய்யப்படுவது தொடர்பில் உரிய கவனம் செலுத்தப்படுதல் வேண்டும்.

**06.** இந்த சுற்றறிக்கை தொடர்பிலான தெளிவுபடுத்தல்களை தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்திடமிருந்து பெற்றுக் கொள்ள முடியும். (தொலைபேசி இல. 011-2484665)

ஒப்பம்/**ஆர்.எச்.எஸ்.சமரதுங்க**
திறைசேரிச் செயலாளர்

பிரதி:- 1. சனாதிபதியின் செயலாளர்
2. பிரதமரின் செயலாளர்
3. அமைச்சரவை செயலாளர்
4. கணக்காய்வாளர் நாயகம்